Regd. No. M. 4593. "KUDI ARASU" 8 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 17 } ஈரோடு, 5-8-1944 ஆடி-மீ 21-உ { மலர் 43

சென்னையில் சந்திரோதயம்

பெரியார் சொற்பொழிவு

பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் 31-7-44-ல் சென்னையில் சந்திரோதய நாடகம் நடைபெற்றது.

நாடகத்திற்கு தோழர்கள் சென்னை பிரசிடென்சி மாஜிஸ்திரேட், என். எஸ். கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், தண்டபாணி தேசிகர், மற்றும் பல சினிமா நாடக நடிகர்கள், வித்வான்கள் முதலியவர்கள் உட்பட சுமார் 4000 பேர் வரையில் வந்திருந்தார்கள். மண்டப ஒலி பெருக்கி பெரிதாய் வைத்து மேடை நடிப்பு நிகழ்ச்சி பேச்சுகள் அவ்வளவும் ½ மைல் தூரம் கேட்கும்படி செய்யப்பட்டது. நடிப்பின் கடைசி பாகத்தில் பெரியார் அவர்கள் தமது சொற்பொழிவை ஆரம்பித்தார். அது வருமாறு:

தாய்மார்களே! தோழர்களே! நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் முதலாகிய திராவிட கலைவாணர்களே! கலா நிபுணர்களே! உங்கள் மத்தியில் பேசக்கிடைத்த வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். தோழர் அண்ணாதுரை அவர்களால் துவக்கப்பட்டு, அவரே தலைமை வகித்து சுயமரியாதை இயக்கத்தார் ஆதரவில் நடைபெற்ற சந்திரோதய நாடகத்தைக்கண்டு களித்தீர்கள். நீங்கள் 4000 பேர் கண்டும் கேட்டும் உணர்ச்சி பெற்றும் அனுபவித்த மகிழ்ச்சி இன்பம் எவ்வளவோ அவ்வளவு இன்பத்தைவிட பெரும் பாகத்தை நான் ஒருவன் அனுபவித்தேன். திராவிட கலைவாணர்களாகிய தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், தண்டபாணி தேசிகர் முதலியோர்கள் முன்பு ஒருவர் நடிப்பது என்றால் அதுவே ஒரு அதிசயிக்கத்தகுந்த காரியமாகும். அப்படி இருந்தும் நீங்கள் ஆரம்பம் முதல் முடிவு வரை மிக்க மகிழ்ச்சியோடு சுவைத்ததை நான் கண்டு வந்தேன்.

இந்த நடிப்பில் நிபுணர்கள் பல குற்றங்குறைகள் காணலாம். ஆனால் நடித்தவர்கள் நடிப்புத் தொழிலை வாழ்க்கையாகக்கொண்டு தேர்ச்சிபெற்ற நடிகர்கள் அல்ல என்பதோடு அவர்களுக்கு [illegible] ஆர்வம் யார் சுவைத்தாலும் சுவைக்காவிட்டாலும், யார் பாராட்டினாலும் பாராட்டாவிட்டாலும், திராவிடர்களின் மானத்தில் அவர்களது முன்னேற்றத்தில் கவலை கொண்ட ஒரு திராவிடன் செய்ய வேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்று என்று கருதி துணிந்து நடிப்பவர்களாகும். அன்றியும் தகுதி உள்ள நடிகர்கள் இரண்டொருவரைத் தவிர மற்ற யாவரும் நடிப்புக் கலையின் பேரால் நடிப்புத் தொழிலை தங்கள் சொந்த வாழ்க்கைக்கு வழியாகக் கொண்டு திராவிடர்களின் மான அழிவுக்கும் திராவிட எதிரிகளின் ஆக்கத்துக்குமே நடத்துகின்றபடியால் அரைகுறையாக இருந்தாலும் குற்றமில்லை என்று துணிந்து வந்து நடிக்கும் ஆர்வமேயாகும். அப்படி இருந்தும் அதை நீங்கள் சுவைத்ததைக் கண்டு உளம் பூரித்தேன்.

தோழர்களே! இன்று நம் நாட்டில் நடைபெறும் நாடகப் பிழைப்புக் கூட்டத்தாரின் நடிப்பை, ஒன்று நாம் இம்முறையில் திருப்பவேண்டும் அல்லது அவைகளை அழிக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் இன்று அநேகர் பாடும் முறையும், பஜனை முறையும் திராவிடர்களுக்கு மிக மிக கேட்டை விளைவிப்பதால் அவைகளும் அழிக்கப்பட வேண்டியவைகளேயாகும். சில காலத்திற்கு முன்பு இம்மூன்று துறைப் பெருமையும் அவைகளின் பேரில் பிழைக்கும் பிழைப்பும் ஆரியர்களிடம் பெரும்பாலும் இருந்து வந்தது. ஆனால் இன்று எப்படியோ அவை திராவிடர்களிடம் வந்துகொண்டிருக்கிறது.

புலவர் மேடை, இசை மேடை, நடிப்பு மேடை மற்றும் பல மேடைகள் இனியும் சிறிது நாள்களில் திராவிடர்களுக்கே சொந்தமாக ஆகிவிடும் என்பது என் (ஆசையின்) முடிவு. இந்த சமயத்தில் திராவிட புலவர்களும், இசைவாணர்களும், நடிப்புவாணர்களும் செய்ய வேண்டிய காரியம் என்ன? தங்கள் வயிற்றுப்பிழைப்பையே முக்கியமாய் [illegible] ஆரியர்களுக்கு ஆக்கமளிக்கத்தக்கதாகவும் நடந்து தங்கள் தொழிலை நடத்துவதானா என்று கேட்கின்றேன்.

நாடகத்துறையில் இன்று சில திராவிடர்கள் நடந்துவரும் மானங்கெட்ட தன்மையான நடிப்புகளை மாற்றி திராவிடர் நலனுக்கு ஏற்றவண்ணம் நடித்துக் காட்டி அதை நாட்டில் பரவச்செய்ய நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மங்களகான சபை என்னும் ஒரு நடிக குழுவை தயாராக்கி அதன் செயலை ஏற்று நடத்தப்போகிறார்கள் என்று கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அவர் நானறிந்த வரை சுமார் 10, 15 வருட காலமாகவே திராவிட உணர்ச்சி கொண்டு துணிந்து திராவிடத் தொண்டு ஆற்றுவதானது உண்மைத் திராவிடன் ஒவ்வொருவனும் அவருக்குக் கடமைப்பட்டவனாக ஆகவேண்டியதாகும் என்பதோடு மற்ற நடிகர்கள் வெட்கப்படவேண்டியதுமாகும்.

தோழர் என். எஸ். கிருஷ்ணன் தொண்டானது திராவிடர்கள் தன்மானம் பெற்று மனிதத்தன்மை அடைந்துவிட்டார்கள் என்ற திராவிட சரித்திரத்தில் முக்கிய இடம் பெறவேண்டியதாகும்.

முக்கலை வாணர்களே! நீங்கள் இதுவரை தெரிந்திருக்காவிட்டாலும் இன்றாவது தெரிந்திருப்பீர்கள். அதாவது திராவிடர்களின் நிலை மிக்க இழிவானதும் கேடானதுமான நிலையில் இருக்கிறது என்பதை. அதை மாற்ற எங்கள் போன்ற சிலர் தங்களது யாவற்றையும் ஒப்படைத்துத் தொண்டாற்ற வருகிறார்கள் என்பதும் நீங்கள் அறிவீர்கள். அதனால் பலன் ஏற்பட்டதோ இல்லையோ என்பது ஒருபுறமிருந்தாலும் திராவிடர்களின் இடையில் ஒரு புதிய கிளர்ச்சி தோன்றி இருப்பதை நீங்கள் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட சமயத்தில் கலைவாணர்கள், கலைவாழ்க்கைக்காரர்கள் செய்யவேண்டிய வேலை என்ன? நாங்கள் செய்துவரும் வேலையை அழிப்பதுதானா? அதாவது புலவர்கள் இராமாயண பாரதம் பெரிய புராணம் முதலிய ஆரியக்காவியம் புராணம் ஆகியவைகளை திராவிட மக்களிடை பரப்புவதும் இசைவாணர்கள் [illegible]

ராமன், சுப்பன், முருகன் ஆகியவர்களைப்பற்றிப் பாடுவதும், நடிகர்கள் அப்புராணக்காவியக்கதைகளை நடிப்பதும் தானா இவர்கள் வேலை என்று கேட்கிறேன். இதற்கு ஆகவா திராவிட மக்கள் இவர்களை ஆதரிப்பது? இவர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்று பிரார்த்திப்பது?

கலையோடு மனிதனுக்கு அறிவு, மானம், இனப்பற்று ஆகியவை இருக்க வேண்டாமா? பணமேதானா பெரிது?

நீங்கள் பெற்ற கலை ஞானத்தை அந்த ஞானத்தால் பெற்ற செல்வத்தை உண்மைத் திராவிடன் திராவிடனுக்குப் பயன்படுத்தாவிட்டாலும் திராவிடர் கேட்டிற்குப் பயன்படுத்தாமலாவது இருக்க வேண்டாமா? அப்படித் திராவிடர்களுக்கு கேடாகப் பயன்படுத்தியவர்களை, பயன்படுத்துபவர்களை எப்படித் திராவிடர் என்று நம்மால் சொல்ல முடியும்?. இவர்களை ஆரியர் என்று சொல்லாவிட்டாலும் திராவிடரும் ஆரியருமல்லாத அலி இனம் என்று தானே சொல்லவேண்டும். ஜெர்மனியில் உள்ள யூதர்கள் போல் இவர்களை திராவிட நாட்டில் உள்ள ஒருவகை யூதர்கள் என்று தானே சொல்லவேண்டும். ஜெர்மனி யூதன் செல்வத்தை மாத்திரம் கொள்ளை கொள்ளுகிறான். இந்த யூதர்கள் செல்வம், அறிவு, மானம் யாவற்றையும்பாழாக்குகிறார்கள். இதை நான் மிக்க மனவேதனையோடுசொல்லுகிறேன். மூன்று மணி நேரம் பாட்டுக்கச்சேரிக்கு 1000 ரூபாயா, 1500 ரூபாய் ரேட்டா? 3 மணி நேர நாடகத்திற்கு 1000, 1500, 2000 ரூபாய் வசூலா? சினிமாக்களுக்கு திராவிட நாட்டில் ஒரு நாளைக்கு 2 லட்ச ரூபாய் வசூலா? இவை வருஷம் எத்தனை கோடி ஆகிறது. எத்தனையோ கொள்ளைக்காரர்கள் வேறு பல வழிகளில் இதற்குமேல் தொடர்ந்து கொள்ளை அடிக்கிறார்கள். என்றாலும் இம்மாதிரி கலைகள் போதாதா?

அப்பப்பா இந்த சினிமாக்களையும், புராண நாடகங்களையும், பஜனைப் பாட்டுக்கச்சேரிகளையும் பாட்டுபிளேட்டுகளையும் எடுத்துக்கொண்டால், நம்ம கள்ளுச்சாராயக்கடைகளையும், தாசி வேசிகள், குச்சுக்காரிகள் வீடும், மார்வாடி சேட்டி கொள்ளைகளும் ஆயிரம் பங்கு மேலென்று சொல்லுவேனே. இவற்றால் மானம் போவதில்லை; இனம் கெடுவதில்லை; நிரந்தரமாக அறிவு பாழாவதில்லை என்பதோடு இவைகள் (கள்ளுக்கடையும், குச்சுக்காரிகள் வீடும்) மனித சமுதாய நல்வாழ்க்கைக்கு கேடு என்பதானாலும், மார்வாடி கொள்ளையால் நாட்டுப் பொருள் வேறு நாட்டிற்கு ஓடுகிறது என்பதானாலும் [illegible] கொள்ளையால் ஆரியர் [illegible] திரம் ஆகின்றன என்றாலும் இந்தப் புராண காவியப் புலவர்களும், இந்த இசைவாணர்களும், இந்த நடிப்பு மணிகளும் ஒழிக்கப்பட்ட பிறகே அவை ஒழிக்கப்படவேண்டியவைகளாகும்.

சுயமரியாதைக்காரர்களின் காரியம் போதிய வெற்றி பெறாமல் தடைபடுத்தப்படுவதற்கு காரணமே இந்த, முக்கலையும், முக்கலை வாணர்களும் முக்கலை ரசிகர்கள் என்று சொல்லப்படுபவர்களுமாவார்கள்.

மணிக்கு ஐந்நூறு ரூபாய் வீதம் ரேட்டு வாங்கிக்கொண்டு 2, 3 ஆயிரம் பேர்களைக் கூட்டி உட்கார வைத்துக்கொண்டு 3, 4 மணி நேரம் முருகா முருகா, இராமா இராமா, கிருஷ்ணா கிருஷ்ணா என்று பாடுவதும் இவர்கள் தங்களது மனைவி வைப்பாட்டிமார்களுடன் நடத்திய நடத்துகிற லீலைகளை வர்ணித்துப் பாடுவதும் தானா இசைக் கலையின் பயன்? இவ்வளவு பணச்செலவுக்கு இதுதானா பிரதிபிரயோஜனம்?

கேட்பவர்களில் எத்தனை பேருக்கு இசை தெரியும்? 3000 பேரில் 300 பேர்கள் இருப்பார்களா? மீதி 2700 பேர்கள் எதை ருசிக்கிறார்கள்? முருகனுடையவும், இராம கிருஷ்ணனுடையவும் தெய்வத் தன்மையைத் தானே இரசிக்கிறார்கள். ஆகவே இந்த இசைக் கச்சேரி முருகன், இராமன், கிருஷ்ணன் முதலியவர்களை தெய்வமாக திராவிடர்களை வணங்கச் செய்யும் பிரசாரமே அல்லாமல் வேறு என்ன என்று கேட்கிறேன். இதை ஒரு சுத்த திராவிட மகன் செய்யலாமா? இதற்குப் பணம் கொடுக்கப் பல மடையர்களா? இதை மெனக்கெட்டு வந்து 3, 4 மணி நேரம் உட்கார்ந்து கேட்க திராவிடர்களிலேயே பல மடையர்களா? இக்கூட்டத்தாரை இப்படியே இருக்க விடலாமா? அதுவும் திராவிடர்களில் இப்படிப்பட்டவர்கள் இருக்கலாமா?

இவ்வளவோடு போகிறதா நம் தொல்லை. இந்த மாதிரி கலைப் பண்டிதர்களை உற்பத்தி செய்ய கல்லூரிகளும், புராணக்கதைப்படி கடவுள்களை வைத்திருக்கக் கோவில்களும், அவர்கள் திருவிளையாடல்களை நடவடிக்கையில் காட்ட திருவிழாக்களும், இதற்கு நம் செல்வங்களும், இவற்றை சரிவர நடத்திக்கொடுக்கவும் பிரசாரம் செய்யவும் தேவஸ்தான எண்டோமெண்ட் போர்டும், பார்த்தால் மானமும் உணர்ச்சியும் அறிவும் உள்ள திராவிடனுக்கு வயிறு எரியாதா? இரத்தம் கொதிக்காதா என்று கேட்கிறேன். அப்படிக்கொதிக்காவிட்டால் அவன் குலத்தில் ஐயம் உண்டாகாதா என்று கேட்கிறேன்.

"திராவிடர்களுக்கு வந்து விட்டது நல்ல காலமும் புத்தி தெளிவும்" என்பதற்கு இதுதானா [illegible] என்னே தோழர்களே, கலைவாணர்களே நீங்கள் தான் எங்களைக் காப்பாற்றவேண்டியவர்கள். நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ இப்படி எதிரிகளின் கையாள்களாக ஆகிவிட்டால் எங்கள் கதி என்ன? எதெதற்கு என்று நாங்கள் அழுவது? எதெதற்கு என்று நாங்கள் புரட்சி செய்வது? எதெதற்கு என்று நாங்கள் சிறை செல்வது? உதைபடுவது? உதைப்பது? சிந்தித்துப் பாருங்கள். எதிரிகளோடு போராடுவதா? உங்களோடு போராடுவதா? படித்தவன், பணக்காரன், புலவன், கலைவாணன் ஆகியவர்கள் தன் இனத்துக்கு கேடு விளைவிக்கும் எதிரிகளுக்குக் கையாளாயிருப்பதும், தாங்களே எதிரிகளாய் இருப்பதும் இந்தத்திராவிடநாட்டில் திராவிட மக்களைத் தவிர உலகில் வேறு எங்குமே யாருமே இருக்கமாட்டான். இந்த நிலைமாறி ஆகவேண்டும்— கண்டிப்பாய் மாறி ஆகவேண்டும். வாலிபர்களே உங்களிடத்தில் தான் அந்தப் பொறுப்பு இருக்கிறது. இன்றைய யுத்தத்தில் எத்தனை பேர் சாகிறார்கள்? அவர்கள் அத்தனை பேரும் மடையர்களா? அவர்களை போர் முனையில் நிறுத்தி பலி கொடுப்பவர்கள் அயோக்கியர்களா? இல்லையே, வீரர்கள் தானே! அப்படிப்போல் நீங்கள் இந்தக்கொடுமையை ஒழிக்கும் தன்மானப் போருக்கு ஏன் முன்னணியில் நிற்கக்கூடாது? ஏன் 2000, 3000 பேர் பலியாகக் கூடாது? இந்த வேலையை யார்தான் பார்ப்பார்கள்? கல்யாணமாகிவிட்டால் எவனும் சுயநலக்காரன்தான் ஆகிவிடுவான். பிள்ளைகள் பெற்றுவிட்டாலோ வஞ்சகமான சுயநலக்காரனாக ஆகித்தான் தீருவான். ஒருவர் இருவர் வைத்தியக்காரர்களாக இதற்கு விலக்காக இருக்கலாம். அதைச் சேர்க்கக் கூடாது. ஆதலால் வாலிபர்களாகிய நீங்கள் புறப்படுங்கள் இந்த கலைப்புரட்சிப்போருக்கு. உங்களால்தான் ஆக வேண்டும். பொதுமக்களே! தாய்மார்களே! நீங்கள் எங்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் தொல்லை கொடுக்காதீர்கள். என்று கண்டாலும் இந்த இனக்கொலை, சுயமரியாதைக்கொலை, அறிவுக்கொலை முன்னேற்றத்தடைசெய்யும் ஆரிய அடிமைக் கலைவாணர்களை விரட்டி அடியுங்கள். நீங்கள் ஒத்தை ஆளாய் இருந்தாலும் துணிந்து கூப்பாடு போடுங்கள், தொண்டாற்றுங்கள். கண்டிப்பாய் வெற்றி அடைவோம் என்று பேசி நாடகத்துக்கு வந்த பண்டிதர், கலைவாணர்கள் முதலியவர்களையும், தாய்மார்களையும் பாராட்டி நடிப்புத் தோழர்களையும் போற்றிப் பேசினார்.

அண்ணாதுரை பேசியது

தோழர் அண்ணாதுரை அடுத்தாப் போல் பேசுகையில் பெரியார் மிக்க நிவி

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

கரூர் சுயமரியாதை மாநாடு

கரூர்: 30-7-44 தேதி பசுபதி சேவசாலையில் தோழர் குலசை குமாரவேலு தலைமையில் நடந்தக் கூட்டத்தில் இம்மாதக் கடைசியில் கரூர் தாலுகா சுயமரியாதை மாநாடு நடத்துவதென்றும் தோழர் எஸ். எ. மயில் அவர்களை வரவேற்புக்கழகத் தலைவராகவும் தோழர்கள் பி. கே. ஐயர், வி. க. புலிகேசி ஆகியவர்களை காரிய தரிசிகளாகவும் கொண்ட ஒரு வரவேற்புக் கழகமும் நிறுவப்பட்டது.

டி மாநாடு 27-8-44-உ ஞாயிற்றுக்கிழமை கரூர் அம்பிகை டாக்கீஸில் நடைபெறும்.

தலைவர்: தோழர் சி. என். அண்ணாதுரை எம். எ.

திறப்பாளர்: தோழர் க. அர்ச்சுனன் (இளையகுமாரபட்டக்காரர்)

கொடியேற்றுபவர்: தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்.)

திராவிடநாடு படத்திறப்பு: பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

ஈ. வெ. ரா. நாகம்மை படத்திறப்பு: தோழர் சரஸ்வதி கண்ணப்பன், வேலூர் (பாரதிதாசன் மகள்)

மற்றும் பல சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்வார்கள்.

சாக்கோட்டை

சு. ம. சங்கம்

இச்சங்கத்தின் 10-வது ஆண்டு விழாவில் (14-5-44-ல்) தீர்மானித்த 5-வது தீர்மானத்திற் கிணங்க ஏழை மாணவர் கல்வி உதவி நிதியின் ஆரம்ப விழா 13-8-44 ஞாயிறு மாலை 5½ மணிக்கு சாக்கோட்டை பெரியார் பார்க்கில், கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் இவ்விழாவை ஆரம்பித்து வைப்பார். தோழர் பி. முத்து தனபாலன் பி. ஏ., பி. எல்., டாக்டர் வி. பசுபதி எல். ஐ. எம்., தோழர் எஸ். கே. சாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரும் வந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டிக் கொள்கிறேன்.

கே. கணபதி,
சங்கத் தலைவர்.

பறக்கும் குண்டுகளும், ஜப்பானியரின் கொடுமைகளும் நிறைந்த இந்தப்போரில்

செஞ்சிலுவை

மனித சமுதாயத்திற்காக பாடுபடுகிறது.

நோயாளிகளையும் காயமடைந்தவர்களையும் காப்பாற்றுகிறது.

யுத்தக் கைதிகளுக்கு ஊக்கமளிக்கிறது.

எனவே

“செஞ்சிலுவைக்காக”

என்ற தலைப்பில்

மே. த. கவர்னரின்

யுத்த நிதிக்கு

பண உதவி செய்து

ஒரு சிறந்த காரியத்திற்கு உதவி புரியுங்கள்.

கோவை ஜில்லா தேவேந்திர வேளாள மாநாடு

மேற்படி மாநாடு அவினாசியில் 13-8-44-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், கோவை அ. பழனிச்சாமி கவுண்டர் பி. ஏ., பி. எல்., அவனாசி பஞ்சாயத்து போர்டு நிர்வாக அதிகாரி தோழர் கே. வேலாயுதம் முதலிய பலர் மாநாட்டுக்கு வருகிறார்கள். அன்பர்கள் அனைவரும் திரளாக வருக.

கே. குப்புசாமி, பிரசிடெண்ட்.
கே. மருதாசலம், கௌரவ காரியதரிசி.

சென்னை தமிழ் இளைஞர் கழகம்

சென்னை, வண்ணையம்பதி தனலட்சுமி வித்தியாசாலையில் (ராபின்சன் பார்க் அருகாமையில்) 13-8-44-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு டி கழகத்தின் 2-வது ஆண்டு விழா ராவ் பகதூர் ஜெ. ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. அன்பழகன், இரா. நெடுஞ்செழியன், என். குஞ்சிதம் அம்மையார் முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஒலிபெருக்கிக் கருவி அமைக்கப்படும்.

குடி அரசு

1944-ஆம் ஆகஸ்டு-மீ 5-உ

சேலம் மாநாடு

நாம் பலநாளாக எதிர்பார்த்த சேலம் மாநாடு என்கின்ற S. I. L. F. (ஜஸ்டிஸ்) கட்சி மாகாண மாநாடு இம்மாதம் 20 ஆந்தேதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படப்போவதாக வரவேற்புக் கழகத்தாரால் அனுப்பப்பட்டிருக்கும் செய்தியால் தெரியவருகிறது. அது மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மாநாடு நடக்க அதிக நாள் இல்லை என்றாலும் பல நாளாகவே முயற்சி செய்யப்பட்டு வருவதும் ஒரு மாதத்திற்கு முன்பே இம்மாதத்தில் நடக்கும் என்று தெரிவித்திருப்பதும் யாவரும் அறிந்ததாகும். இம்மாநாட்டைப்பற்றி மக்கள் மிக்க ஆவலாய் இருப்பதால் இது சீக்கிரம் நடைபெற வேண்டியது என்பதும் சீரும் சிறப்புடன் நடைபெறும் என்பதும் யாவராலும் ஒப்ப முடிந்ததாகும்.

திராவிட மக்களின் எதிர்கால திட்டத்தையும் நடைமுறைத் தொண்டையும் விளக்கும் முக்கிய மாநாடாக இது இருக்கவேண்டியதாயிருப்பதால் திராவிட மக்கள் யாவரும் மாநாட்டிற்குச் சென்று பங்கு கொள்ளவேண்டியது அவசியமாகும்.

மாநாட்டில் இரண்டு மூன்று விஷயங்கள் முக்கியமாக சிந்திக்கப்படவேண்டியவைகளாக இருக்கும்.

திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தி அதற்கு ஆக கிளர்ச்சி செய்தல், கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என திருத்தி அமைத்தல், கட்சிக் கொள்கைகளையும், திட்டங்களையும் பற்றி விவாதித்து வலியுறுத்தி அவைகளை அவசியம் நடைமுறைக்கு கொண்டுவர ஏற்பாடு செய்தல் ஆகியவைகள் முக்கியமானவைகளாக இருப்பதோடு மற்றும் சில விஷயங்களும் இடம் பெறும் என்றே நினைக்கிறோம்.

ஆகவே திராவிடநாட்டு திராவிட மக்கள் பெரியோர்கள், இளைஞர்கள், பெண்மணிகள் யாவரும் இம்மாநாட்டை ஒரு "புண்ணியஸ்தல" யாத்திரையாகக் கருதி தவறாது சேலம் சென்று நிலை குலைந்து இருக்கும் திராவிடநாட்டையும், சமுதாயத்தையும் ஆக்கி நிறுத்தி சீர்படச் செய்யவேண்டுமாய் வேண்டுகின்றோம்.

ஜஸ்டிஸ் மாநாடு

20-8-44-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை, சேலத்தில் பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் S. I. L. F. ஜஸ்டிஸ் மாகாண மாநாடு கண்காட்சி கொட்டகையில் நடைபெறும்.

ஜஸ்டிஸ் மாநாடு

(தந்தி)

சேலம்: ஜஸ்டிஸ் மாநாட்டின் விளம்பர அதிகாரி தோழர் எம். ஆர். சித்தையன் அவர்கள் தந்தி மூலம் அறிவிப்பதாவது:—

ஜஸ்டிஸ் கட்சியின் மாகாண மாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக்கூட்டம், சேலம் சுயமரியாதைச் சங்கக்கட்டிடத்தில் 4-8-44 ஆந்தேதி மாலை 6 மணிக்கு தோழர் கே. ஜகந்நாத செட்டியார் அவர்கள் தலைமையிலும் ரோசு அருணாசலம் அவர்கள் வீட்டில் வரவேற்பு தலைவர் தோழர் இரத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையிலும் கூடியது. காரியதரிசிகள் உள்பட கமிட்டியின் எல்லா மெம்பர்களும் நிர்வாகிகளும் வந்திருந்தார்கள். தோழர் என். வி. லிங்கம், மாநாட்டை எவ்வளவு சீக்கிரத்தில் கூட்ட முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கூட்டவேண்டுமென்பதைப்பற்றியும், பாகிஸ்தான் திராவிடஸ்தான் பிரச்சினையைப்பற்றியும் பேசினார். இவைகள் விரிவாக விவாதிக்கப்பட்ட பிறகு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் ஏற்கனவே போடப்பட்டிருக்கும் விசாலமான பந்தலில் 20-8-44-ஆந்தேதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டுக்குத் தலைமைவகிக்க ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மாநாட்டைத் திறந்து வைக்கவும், கொடியேற்று விழா நடத்தவும் சில தோழர்களை கேட்டுக் கொள்ளுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதுவரை அனுப்பப்படாத தீர்மானங்களை மெம்பர்கள் இம்மாதம் 15-ந் தேதிக்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தோழர்கள் கிருஷ்ணசாமி செட்டியார், ராஜாராமலிங்கம், சோமசுந்தரக் கவுண்டர் ஆகியவர்களை வரவேற்புக் கமிட்டியின் கூட்டுக் காரியதரிசிகளாக தெரிந்தெடுக்கப்பட்டது.

மாநாட்டுக்காக கூட்டத்திலே ரூ. 2050 வசூல் செய்யப்பட்டது.

மாநாட்டு சம்பந்தமான காரியங்கள் வெகு துரிதமாக முனிசிபல் சேர்மன் தோழர் பி. ரத்னசாமி பிள்ளை அவர்களின் முயற்சியாலும் மற்றவர்களுடைய முயற்சியாலும் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றன.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஈரோட்டில் தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாடு

ஈரோடு: ஷை மாநாடு 5-8-44 ஆம் தேதி ஈரோடு மகாஜன உயர்தரப்பாடசாலை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. மாகாண முழுவதிலிருந்தும் சுமார் 50 பிரபல வைத்தியர்களும் மற்றும் அநேக பொதுமக்களும் வந்திருந்தார்கள்.

அண்ணாமலை நகர் சித்தஞான ஆராய்ச்சியாளர் தோழர் எஸ். ஜி. சுந்தரம் பிள்ளை அவர்கள் மாநாட்டுக் கொடியேற்றிவைத்தார்.

மாநாட்டுத் திறப்பாளர் உபய வைத்திய பிரவீண டாக்டர் பி. வி. கிருஷ்ணராவ் அவர்களுக்கு வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் வரவேற்புக் கழகத்தின் சார்பாக வரவேற்த்தாள் வாசித்தளித்தார்.

பனகாலரசர் படத்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

மாநாட்டை உபய வைத்திய பிரவீண டாக்டர் பி. வி கிருஷ்ணராவ் அவர்கள் திறந்து வைத்தார்.

வரவேற்புக்கழகத் தலைவர் வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது வரவேற்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

மதுரை தோழர் ஜி. ஏ. சின்னு நாயுடு அவர்களை மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு தோழர் தண்டபாணி பிள்ளை பிரேரேபித்தார். அதை ஆதரித்து தோழர்கள் பழனி டீ. பி. சாமி, திருவாரூர் நித்தியானந்தசாமி, கும்பகோணம் சிவகுருநாத பிள்ளை, பெரியார் ஈ. வெ. ரா. முதலியவர்கள் பேசினார்கள். வைத்தியர் தோழர் சுப்ரமணியம் அவர்கள் தலைவருக்கு வரவேற்புத்தாள் வாசித்தளித்தார். பின் தலைவர் தோழர் ஜி. ஏ. சின்னு நாயுடு அவர்கள், தமது நீண்ட தலைமை சொற்பொழிவை நிகழ்த்தினார்.

மருந்து மூலிகைகள் கண்காட்சி சாலையை திருவிதாங்கூர் சித்த வைத்திய சங்கத் தலைவர் தோழர் நித்யானந்த சுவாமிகள் திறந்து வைத்தார். இத்துடன் மாநாடு இடைவேளை சாப்பாட்டுக்காக ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் மாநாட்டில், தோழர்கள் சேலம் டாக்டர் எஸ். எம். கைலாசிவாலம், என். தண்டபாணி பிள்ளை, கோவில்பாளையம் வைத்தியர் தோழர் தோழர் எஸ். ஜி. எஸ். ஏ. பெரியசாமி முதலியார், கோவை வைத்தியர் சி. கே. கொமரசாமி பிள்ளை, திருவாரூர் வைத்திய பி. எம். எம். பட்டணம் ஆகியவர்கள் முறையே, சித்தவைத்தியமும் தமிழர் பண்பும், சித்தவைத்தியமும் சீர்பெருவழியும், மருந்துகளும் உடம்பின் சத்துக்களும் தற்கால சித்தவைத்தியமும் நோயாளிகளும், சிரநோய் வைத்திய மகுடம் என்னும் பொருள்கள் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

அறிவிப்பு

"குடி அரசு" அடுத்த வாரத்திலிருந்து 12 பக்கங்களுடன் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

சென்னையில் 5வது சு. ம. மாநாடு

30-7-44ல் ஷை மாநாடு கோகலே மண்டபத்தில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தோழர் கனகம்மையார் (சேலம்) அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார்கள். வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் சி. டி. நாயகம் அவர்கள் உடல்நலிவு காரணமாய் வரவில்லையாதலால் ஷை உரையை தோழர் எஸ். குருசாமி அவர்களால் வாசிக்கப்பட்டது. கொடியை தோழர் ஆதிமூலம், அவர்கள் ஏற்றினார்கள். தோழர்கள் மாபெருந்தலைவர் பெரியார் அவர்களும் தளபதி அண்ணாதுரை, டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, பொன்னம்பலம், நெடுஞ்செழியன், அன்பழகன் முதலானவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தீர்மானங்கள் இனிது நிறைவேறி, தலைவர் முடிவுரையுடனும் வந்தனத்துடனும் மாநாடு இரவு 10 மணிக்கு இனிது கலைந்தது. (ஷை மாநாட்டு தீர்மானங்களும் சொற்பொழிவுகளும் பின்னர் வெளிவரும்)

சென்னையில் சந்திரோதயம்

சென்னை ஒற்றவாடை தியேட்டரில் 31-7-44 இரவு 9 மணிக்கு மாபெரும் தலைவர் பெரியார் அவர்கள் தலைமையில் "சந்திரோதயம்" என்ற சமூக சீர்திருத்த நாடகம் காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால் - சிறப்புடன் நடிக்கப்பெற்றது. நாடகத்திற்கு திராவிட நடிக மணிகள் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர், எம். எம். தண்டபாணி தேசிகர் முதலானவர் வந்திருந்து ஆதரித்தனர். ஷை நாடகத்தைப் பாராட்டி கலைசக்கரவர்த்தி என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், பாகவதர் அவர்களும் பேசி மேற்படி நாடகத்திற்கு இருவருமாக ரூ. 900 நன்கொடை அளித்தார்கள். இவர்கள் செய்கை திராவிட மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. பெரியார் அவர்கள் நாடகத்தில் ஆற்றிய சொற்பொழிவு (வேறு பக்கத்தில் வெளிவருகிறது) மக்கள் மனதை மாற்றிவிட்டது என்றே சொல்லலாம். விபரம் பின்னால் வெளிவரும்.

சென்னையில் மயிலைக்கு அடுத்த நொச்சிக்குப்பத்தில் பொதுக் கூட்டம்

1-8-44-ல் ஷை பொதுக் கூட்டம் மீன் பிடிக்கும் தொழிலாளர்களால் நடத்தப்பட்டது. தோழர் ஜீவரத்தனம் தலைமை வகித்தார். தன்மதிப்பியக்கத் தலைவர் பெரியார் அவர்களும் தோழர்கள் ஜனார்தனம், நெடுஞ்செழியன், பொன்னம்பலம், செங்குட்டுவன், குஞ்சிதம், குருசாமி முதலானவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

இரவு 10 மணிக்கு கூட்டம் வந்தனோபசாரத்துடன் இனிது முடிவுற்றது.

அநுதாபக் கூட்டம்

சென்னை: தோழர் எ. முருகேசம் அவர்களின் அன்னை தோழர் தாயாரம்மாள் 19-7-44 தேதி இயற்கையெய்தியதைக் குறித்து 6-8-44 தேதி காலை 9 மணிக்கு மலையப்பன் வீதியிலுள்ள கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடத்தில் (ஏழுகிணறு போலீஸ் ஸ்டேஷன் சமீபம்) அநுதாபக்கூட்டம் தோழர் சி. தங்கராஜ் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே. அன்பழகன், பி. ஜனார்த்தன், என். வி. நடராஜன் முதலியவர்கள் 'நீத்தார் கடன்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

ரோஜா முத்தையா

திருச்சி சுயமரியாதை மாநாடு

தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் வரவேற்புரை

திருச்சியில் 16-7-44 ஆம் தேதி புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருச்சி ஜில்லா சுயமரியாதை மாநாட்டில் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியார் அவர்களே! இயக்கத்தோழர்களே! உங்கள் எல்லோருக்கும் என் தாழ்மையான வணக்கம்.

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்கின்ற உண்மைமாறி பிறப்பே இந்நாட்டில் ஒரு மனிதனை உயர்த்துவதும் தாழ்த்துவதுமென்ற நிலையில் உயர் சாதியிற் பிறந்தார் படிப்பும் செல்வமும் சௌகர்யங்கள் பலவும் பெற்று வாழ தேச்சாதியார் படிப்பில்லாமலும் செல்வமில்லாமலும் மிருகங்களைவிட மிகக் கேவலமாய் நடத்தப்பட்டுவரும் இந்நாட்டில் பிறப்பாலும், படிப்பாலும், செல்வத்தாலும், மனிதன் உயர்வு தாழ்வு கொண்டாடுவது நீக்கப்படுவதற்காகவே சுயமரியாதை இயக்கம் சென்ற 17 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு தொண்டாற்றி வந்திருக்கின்றது.

நாம் செய்த பணிகள்

1. பிரசாரம்
2. மாநாடுகள்.
3. பத்திரிகைகள்.
4. பல வெளியீடுகள்.
5. திண்ணைப்பிரசாரம்.
6. குறிப்பிட்ட நோக்கத்தோடு கிளர்ச்சிகள் செய்தல்.

நாம் பெற்ற வெற்றிகள்

1. பல லட்சக்கணக்கின் ஆண்களையும், பெண்களையும் நம் இயக்கத்தில் சேர்த்தோம்.

2. பிறப்பொன்றே என்பதை ஒப்புக் கொண்டு பார்ப்பனப் புரோகிதனை அடியோடு ஒழித்தும் திருவிழாக்களுக்குச் செல்வதை நிறுத்தியும், நாகரீகத்திற்கு விரோதமாயும் பகுத்தறிவிற்கு முரணான பல செய்கைகளை விட்டொழித்தும், கீழ் நிலையில் வைக்கப்பட்ட மக்கள் தன்மான உணர்ச்சி கொண்டு மேல் நோக்கிச் செல்வதும் மூடநம்பிக்கைகள் ஒழிக்கப்பட்டு அறிவுக்குப் பொருத்தமாக மக்களில் பெரும்பாலார் நடந்து வருவதும் இவை போன்ற பிற முன்னேற்றங்களுமாகும்.

இயக்கத்தின் எதிர்கால நிலை

25 ஆண்டுகள் எதிர் நோக்கிப்பார்க்க

1. அரசாங்க உத்தியோகம்.
2. வக்கீல் தொழில்.
3. காப்பிக்கடைகள்.
4. கோவிலும், மடங்களும்.

இவை நான்கு வகையிலும் மேம்பட்ட பிராமணன் தன்னிலை தவறி கீழ்நோக்கிச் செல்லுங்காலம் மிகவே யாகும். நாட்டு வளத்தை கருதாத வட்டித்தொழில் மூலம் வளம்பெற்ற அடுத்த ஜாதியாரான வைசியர்கள் தங்கள் செல்வநிலை மாறி சற்று தாழ்ந்த நிலைக்கு போகும் காலம்.

தமிழ் நாட்டு பழங்குடி மக்களாய் நாடார்களும் நாயக்கர்களும் முறையே வியாபாரத்தாலும் உற்பத்தி செயலாலும் பெரும் செல்வர்களாகி மேல் நிலைக்குச் செல்லுங்காலம்.

மிகத்தாழ்ந்த நிலையிலிருக்கும் ஆதித்திராவிடர் அரசாங்க உதவியாலும் உத்தியோகத்தாலும் நிலத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமையாலும் மேல்நிலையடைதல்.

மற்றுமுள்ள தமிழ்ப்பெருங்குடி மக்களான, படையாச்சிகள், உடையார்கள், ரெட்டியார்கள், கள்ளர்கள், மறவர்கள், அகம்படையர்களும் தங்கள் தற்கால கேவல நிலை நீங்கி, படிப்பாலும் தொழிலாலும் சற்று உயர்ந்த நிலையடையும் காலம்.

இக்காலத்திலேதான் மக்கள் ஒரே நிலை அடைவார்கள். சுயமரியாதை இயக்கமே மக்களை இவ்வகையில் சமப்படுத்தி சமதர்மத்திற்கு அடிகோலி விட்டது.

கடவுள் வணக்கமும்; மக்கள் வாழ்க்கையும்

உலக மக்கள், கடவுள் எல்லாம் வல்லவன் உலகத்தையும் மக்களையும் மற்றெல்லாவற்றையும் படைத்தும், காத்தும் வருகின்றான். அழிக்கவும் செய்வான். மக்களிடத்தே அன்புடையவன் நெறி தவறி நடப்போரை தண்டிப்பானென்று உணர்ந்து அவனது அருள் பெற ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு வழி சொல்ல அந்தந்த மதத்தைச் சார்ந்தவர் அவ்வழியே சென்று ஆண்டவன் அருள்பெறுவார்களென எழுதப்பட்டும், சொல்லப்பட்டும், நம்பப்பட்டும் வருகின்றது. நம் நாட்டில் சைவர், வைணவர் பெரும்பாலோர் இவர்கள் கோவில் சென்று இறைவனை வணங்குவதும் மதச்சின்னங்களை சரீரத்தில் தீட்டுவதும், விழாக்களுக்குச் சென்று வருவதும், யாத்திரை செல்வதும், தேவார திருவாசகம் திருவாய் மொழி போன்ற பிரபந்தங்களைப்பாடுவதும், செயலுடையோர் கோவில் கட்டுவிப்பதும், இன்னும் தங்கள் செயலுக்கேற்ப கோவிலுக்கு நகைகளும், சொத்துக்களும் வாங்கிவைப்பதுமான செயல்களை மேற்கொள்ளுகின்றார்கள். இவைகளை கையாளுபவர்கள் பிராமணர், செட்டியார், சைவ வேளாளர்கள், ரெட்டியார்கள், வைணவர்களான நாயுடு, பத்மவேலமா நாயுடுகள் இவர்களேயாவர். பிறஜாதியார்கள் பெரும்பாலும் சிறு தெய்வங்களை வழிபட்டு ஆடு, கோழி சமைத்து உண்டுகளித்திருப்பார்கள். இவர்களிடையே பெரிய தத்துவங்கள் எதிர்பார்க்க முடியாது. கடவுள் பொல்லாதவன் அவனுக்கு ஆடு கோழி சாராயம் சுருட்டு இவைகளைக் கொடுத்து நல்லது செய்து கொண்டாலொழிய நம்மை தொலைத்துவிடுவானென்ற நம்பிக்கை. இக்கீழ்ச் ஜாதியினரிடத்தில் கோவில் சொத்தோ நிர்வாகமோ மடங்களோ இல்லை, ஆண்டவன் பெயரைச் சொல்லி எந்தக் கெடுதலும் செய்ய மாட்டார்கள். மேலே சொல்லிய மேல் ஜாதிக்காரர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் லஞ்சம் வாங்கியும் பல அட்டூழியங்கள் செய்தும் பெரும் பணம் சம்பாதித்தும், வட்டித் தொழில் செய்தும், வியாபாரத்தின் பேரால் ஏழை மக்களை வஞ்சித்தும் ஏமாற்றியும், பெரும் தொழில்கள் நடத்தி பெரும் முதலாளிகளாகியும் அரசாங்க செல்வாக்கைப் பெற்று தங்கள் சுயநலத்திற்கு வழிதேடிக் கொண்டு கோவில் கட்டி வருகின்றார்கள். கடவுளும் மதமும் இவர்களை நன்னெறியல் வைத்ததாகத் தெரியவில்லை. கடவுள் நம்பிக்கையில்லாதவர்களைவிட இவர்கள் நம்பிக்கையில் மேம்பட்டவர்கள். நல்லவர்களையும் பார்க்கின்றோம் கெட்டவர்களையும் பார்க்கின்றோம். இருசாராரிலும் கடவுள் நம்பிக்கையும் மதமும் இவர்களை எப்படி ஒழுக்கத்திலோ நல்வாழ்க்கையிலோ உயர்த்தியிருக்கின்றதென்பது புலனாகவில்லை. ஒழுக்கத்தையே பெரிதென வற்புறுத்திய புத்தர், மகாவீரர் இவர்களது மதங்களை அழிக்க முற்பட்ட சைவம் ஒழுக்கத்தைக் கவனியாதுவிட்டதோடு நில்லாமல் தீயொழுக்கத்தை அதிகமாக கையாண்டு வந்திருக்கின்றது.

(தொடரும்)

சிதம்பரத்தில் கிந்தனார்

வன்னியர் கல்வி விருத்தி நிதிக்காக வன்னியர் வளர்ச்சிக் கழகத்தார் முயற்சியால் அண்ணாமலைக் கல்லூரி பட்டமளிப்பு மண்டபத்தில் 23-7-44 ஞாயிறு இரவு 9-30-க்கு நகைச்சுவை மன்னர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால் கிந்தனார் காலட்சேபம் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடிக் கண்டுகளித்தனர்.

ரோஜா முத்தையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

…மாய் பேசினார் என்றும் தமிழ்நாட்டில் இப்போது பல புலவர்களும், என். எஸ். கிருஷ்ணன், ராதா, போன்ற பல நடிக புலவர்களும் பல இசைவாணர்களும் நமக்கு ஆதரவளித்து வருகிறார்கள் என்றும், இக்குறைகளை என். எஸ். கிருஷ்ணன், பாகவதர், தேசிகர் போன்ற கலைஞர்கள் தீர்த்துக்கொடுப்பார்கள் என்றும், அதற்கு ஆகவே என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மங்களகான சபாவை வாங்கி இருக்கிறார் என்றும், அவர்களுக்கு நட்டம் வராது என்றும் வந்தால் எங்களால் கூடிய அளவு அதை பரிகரிக்கிறோம் என்றும், (இந்த இடையில் பெரியார் நட்டமே வராது என்றார். கை தட்டல்) பெரியார் ஒரு பெரிய பொருளாதார நிபுணர், அவர் நட்டம் வராது என்று சொல்லும்போது நட்டமே வராது என்றும் பேசி கிருஷ்ணன், பாகவதர், தேசிகர் ஆகியவர்களுக்கு மாலை இட்டார். பொதுமக்கள் மும்மணிகளையும் பார்க்கவேண்டும் என்று உரத்துச் சொன்னதால் மூவரும் மேடை ஏறினார்கள். பெரியார், அண்ணாதுரை ஆகியவர்களுடன் இம்மூவரும் ஒரு மேடையில் நிற்பதைப் பொதுமக்கள் 4000ம் பேரும் 5 நிமிஷம் கை தட்டி வாழ்த்துக்கூறிய வண்ணம் மகிழ்ந்தார்கள்.

மூவர் பேச்சு

மூவர்களும் பாராட்டிதலுக்கு நன்றி கூறும் முகத்தான் பாகவதர் எழுந்து எங்கள் மூவருக்குமாக எங்கள் தலைவர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பேசுவார்கள் என்றார். என். எஸ். கிருஷ்ணன் முன்வந்து நகைச்சுவை காட்டுவது போல் தலையை நீட்டி எழுந்ததும் "கிருஷ்ணன் வாழ்க" என்ற கூச்சல் வானத்தை முட்டி மேகத்தைக் கலைத்திருக்குமென்றேசொல்லலாம்.

N. S கிருஷ்ணன் பேச்சு

பெரியார் அவர்களே, அண்ணாதுரை அவர்களே, தோழர்களே!

பெரியார் அவர்கள் சொன்னதெல்லாம் சரியானதே. நாங்கள் கொள்ளை அடிக்கிறோம் என்பதும் எங்களால் நன்மையைவிட கேடே அதிகம் என்பதும் எங்களைத் திருப்பவேண்டும் என்பதும் மிகவும் சரியானதும் அவசியமானதுமாகும். இதில் என்ன தப்பு என்றால் பெரியார் அவர்கள் இந்த மாதிரி வெகு காலத்துக்கு முன்னமே எங்களுக்குச் சொல்லி எங்களை மிரட்டி கண்டித்திருக்க வேண்டும். இப்பொழுதாவது அறிந்து சொன்னதற்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். அண்ணாதுரை அவர்கள் எங்கள் விரோதம் கூடாது என்பதற்கு ஆக எங்களைப் பாராட்டியும் பெரியார் சொன்னதைக் [illegible] ஒருவர், இப்படியும் ஒருவர் இருக்க வேண்டியது தான். பெரியார் எங்கள் தலைவர்; அண்ணாதுரை என் குரு, நண்பர், சகோதரர் ஆவார். நாங்கள் பெரியார் தொண்டுக்கு உதவியளிக்க வேண்டியவர்களாவோம். அதுவே எங்கள் நன்றி அறிதல் கடமையாகும். எங்களுக்குத் தெரியும் எங்கள் நிலை எப்படி உயர்ந்தது என்பது. நாங்கள் இனி எங்களைத் திருத்தக் கவலை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லாதபடி நடப்போம். சினிமாவினால் கேடு இருக்கிறது; பணம் பாழாகிறது; புத்தி கெடுகிறது என்பதெல்லாம் சரி. நான் இது வரை 67 சினிமாவில் நடித்திருக்கிறேன்; ஒரு நடிப்புக்கு ரூ. 20000 வரையும் வாங்கி இருக்கிறேன்.

ஆனால் இன்று என்னிடம் இருக்கும் பணம் எனக்கும் மதுரம் அம்மையாருக்கும் சேர்ந்து (என் சொத்து) அறுபது ஆயிரம் ரூபாயே (60,000) ஆகும். நான் கெட்ட வழியில் எதும் செலவு செய்யவில்லை. எனக்கு சரி என்றுபட்ட நல்லகாரியங்களுக்கு செலவு செய்துவிடுகிறோம். 30, 40 குடும்பங்கள் என்னுடன் இருக்கின்றன. நான் ஏற்றுக்கொண்ட மங்களகான சபை நாடகக் கம்பெனி மூலம் என் குடும்பம் 100-க்கு மேல் கொண்ட குடும்பமாகப் பெருகிவிடும். லாபத்தை எதிர்பார்த்து நான் அதை நடத்த இறங்கவில்லை. என் கடமையைச் செய்ய ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இன்றைய நாடகம் நன்றாய் நடத்தப்பட்டது. இந்த சுயமரியாதை சங்கத்துக்கு ஆக இன்று வசூலான 2100 ரூபாயோடு நானும் பாகவதரவர்களும் சேர்ந்து 900 (தொளாயிரம்) ரூபாய் நன்கொடையாகக் கொடுத்து வசூல் தொகையை மூவாயிரமாக்குகிறோம். இதை ஏற்றுக்கொள்ளவேண்டுகிறோம் என்று பேசினார்.

மூவாயிர ரூபாய் வசூலில் 1000 ரூ. செலவு போக 2000 ரூபாய் அண்ணாதுரை அவர்கள் கையில் கொடுக்கப்பட்டு அதை தோழர் டி. ஷண்முகம் அவர்கள் கையில் கொடுக்கப்பட்டது.

சென்னையில் இந்த நாடகமும் இந்தப் பேச்சுகளும் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கிற்று என்று சொல்லலாம்.

தஞ்சையில் மருத்துவர் மாநாடு

தஞ்சையில் 25-7-44-ந்தேதி தஞ்சை மாவட்ட மருத்துவர் சங்கக் காரியக் கமிட்டி தோழர் வீராசாமி அவர்கள் தலைமையில் கூடி 18-8-44-ந் தேதி தஞ்சையில், தஞ்சை ஜில்லா மருத்துவர் மாநாடு கூட்ட முடிவு செய்யப்பட்டது.

திருவாரூரில் சந்திரோதயம்

திருவாரூர் கருணாநிதி தியேட்டரில் 18-8-44-ல் வெள்ளி இரவு 10-30 மணிக்கு பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் காஞ்சி திராவிட நடிகர் கழக தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் கோஷ்டியாரால்

சந்திரோதயம்

என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

பெரியார் அவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

M. A. ஆறுமுக நாடார், முனிசிபல் கௌன்சிலர், தலைவர்.

V. பார்த்தசாரதி நாயுடு, M. துரைராஜ், உபதலைவர்கள்.

P. V. O. இராஜகோபாலன், M. K. ஜப்புலிங்கம், காரியதரிசிகள்.

டிக்கட் விபரம்:— ரூ. 5, 2, 0-8-0

கிடைக்குமிடம்:— 1-8-44 முதல்

P. V. O இராஜகோபாலன், காசுக்கடை, விஜயபுரம்.

கோ- தண்ணாயமலை, கலப்பை மார்க் சுருட்டுக் கம்பெனி, ஆண்டார் தெரு, திருவாரூர்.

மற்றும் பல இயக்க முக்கியஸ்தர்களிடமும் கிடைக்கும்.

ஓர் வேண்டுகோள்

திருச்சி ஜில்லா தன்மதிப்பியக்க தோழர்கள் அனைவரும், இனிதம் வேலைத்திட்டத்தை வகுத்துக் கொள்ள 13-8-44 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு தேவதானம் கருணாநிதி பார்க்கில் நடக்கும். கூட்டத்துக்கு இதையே அழைப்பாக எண்ணி வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம் என மலைக்கோட்டை, பொன்மலை, ஸ்ரீரங்கம் திராவிட வாலிபர் கழகத்தார்கள் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

மறைவு

சிதம்பரம்: தன்னுணர்வு இயக்கத் தோழர் கே. நாராயணசாமியின் தந்தையும், பிரபல நிலக்கிழவருமான தோழர் சேவ படையாச்சி அவர்கள் சின்னாள் நோய்க்குப் பின் தன் சொந்த ஊராகிய சிதம்பரம் தாலூகா ஓடாக்கநல்லூர் கிராமத்தில் 19-7-44 அன்று [illegible]

சேலத்தில் கிருபானந்த வாரியார் திணறல்

கேள்விகளுக்கு பதில் இல்லை
கூட்டம் குழப்பத்தில் முடிந்தது

சேலம் செவ்வாய்ப்பேட்டை கன்னிகாபரமேஸ்வரி கோவிலில் 28-7-44ல் அருணகிரிநாதரின் 2ம் பாகத்தைப்பற்றி சொற்பொழிவாற்ற வாரியார் வந்திருந்தார். இரவு 9 மணிக்கு கதாகாலட்சேபம் செய்ய ஆரம்பித்தார். காலட்சேபத்திற்கு, திராவிடத் தோழர்கள் ஏராளமாகச் சென்று இருந்தனர். செவ்வாய்ப்பேட்டை திராவிடர்க் கழகத்தாரால் கேள்வித்தாள் கிருபானந்த வாரியாரிடம் கேள்விக்கு பதில் சொல்லும்படி கொடுக்கப்பட்டது; வாரியார்வாங்கி பக்கத்தில் இருந்த பின்னணி கோஷ்டியாரிடம் கொடுத்து விட்டார். உடனே கோவிலின் முக்கியஸ்தர் எழுந்து இது பொது கோவில் அல்ல. இது ஒரு சமூகத்தாருக்கே சொந்தமான கோவில், நாங்கள் பிரியப்பட்டு வைத்திருப்பதால், நீங்கள் இவ்விடம் யாதொரு கேள்வியும் கேட்கக் கூடாது, நீங்கள் கேள்வி கேட்கப்பிரியப்பட்டால் பொது இடங்களில் வைத்திருக்கும் பொழுது தாராளமாகச் சந்தேகத்தை எல்லாம் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம் என்று கூறினார். உடனே கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. கூச்சல் பலமாகவே எலக்ட்ரிக் லைட்டுகளை அணைத்து விட்டு கதவுகளை மூடிவிட்டனர். பின் சில முக்கியஸ்தர்கள் வந்து அமைதி நிலவ பார்த்தனர். முடியாமல் போய் விட்டது. பின் பெரியார் வாழ்க! புராணங்கள் ஒழிக! என்ற பல வாழ்த்தொலிகளுடன் பல தோழர்கள் வெளி வந்து விட்டனர்.

தேனீர் விருந்து

நாகை முனிசிபல் உபதேர்தலில், [illegible] தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் டி. என். ராமச்சந்திரன் அவர்களுக்கு தோழர் எஸ். பி. [illegible] அவர்களால 24-7-44-ந் தேதி மாலை, [illegible]பன் பாங்க் கட்டிட மாடியில் தேநீர் விருந்து கொடுக்கப்பட்டது.

தெ. ஆ. மாவட்ட மாநாடு

தென்னார்க்காடு மாவட்ட திராவிடர் மாநாடு திருப்பாதிரிப்புலியூர் முத்தையா ஹாலில் 29-7-44-ல் விருதுநகர் நகராட்சித் தலைவர் இராவ்பகதூர் வி. வி. இராமசாமி அவர்கள் தலைமையில் அதி சிறப்பாக நடைபெற்றது. தோழர் மா. பீட்டர் அனைவரையும் வரவேற்றார். [illegible] தோழர் தவமணிராசன் கொடியேற்றுவித்தார். பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். அறிஞர் அண்ணாதுரை திராவிடநாட்டுப் படத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் கடலூர் வீரமணி, ஜனார்த்தனன், நெடுஞ்செழியன், பொன்னம்பலனார், பாலகவி அப்துல் வகாப், பாவலர் பாலசுந்தரம் ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினார்கள். திராவிடர் இயக்கம் அமைத்தல், விதவை மணம், புராண இதிகாசங்களை எரித்தல், போருக்குப் பின் புதுத்திட்டம் அமைத்தல், தென்னார்க்காடு ஜில்லா மாவட்ட திராவிட வழக்கறிஞர் கழகம் நிறுவல், பகுத்தறிவுப் பாடப் புத்தகங்களை ஏற்படுத்தல், தமிழ்ச் சங்கீத சிரோமணி வகுப்பு உண்டாக்கல் முதலியவற்றைக் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழரசன், இளவழகன், நடனஅரசு, தர்மராஜன், இராமலிங்கம், கலாமணி ஆகியோர் இனிய தமிழிசை நிகழ்த்தினார்கள். மாநாட்டில் இருவர் கலவரம் செய்ய முயன்றார்கள். ஆனால் இவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு அன்று பூராவும் காவலில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். மாநாடு அமைதியாகவே நடைபெற்றது.

மாலை 7 மணிக்கு குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் மஞ்சகுப்பம் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அறிஞர் அண்ணாதுரை, பாலகவி அப்துல் வகாப், பெரியார் ஆகியோர் பேசினார்கள்.

பெரியார் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது மழை பெய்ய ஆரம்பித்து விட்டதால் சொற்பொழிவை சீக்கிரத்தில் முடித்துக் கொண்டார். கூட்டத்தை முடித்துக் கொண்டு [illegible] திரும்புகையில், சில காலிகளால் செருப்பும் பாம்பும் வீசியெறியப்பட்டது. அவை யார் மீதும் விழவில்லை. இத்தகைய காலித்தனங்களைக் கையாள்வது பேடித்தனம், கோழைத்தனமென்பதோடு கண்டிக்கக்கூடியதாகும்.

கடலூர் நாடார் வியாபாரிகள் [illegible] வீ. வீ. இராமசாமி அவர்

புளுகு மித்திரனுக்குத் தமிழுலகம் ஆதரவேன்?

சிதம்பரத்தில் டவுன் ஹைஸ்கூலில் 23-7-44ல் சென்னை சங்கீத சிரோமணி வகுப்புப் பாடத்திட்டத்தைக் கண்டித்து மாற்ற வேண்டுத் தீர்மானிக்கக் கூடிய ஒரு கூட்டத்திற்கு அந்தக் கூட்டத்திற்கே வாராத தோழர் சி. வி. சீனிவாசாச்சாரியார் தலைவராயிருந்ததாகவும் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரவர்கள் வந்து பேசினவர்களில் ஒருவராகவும் காட்டி; ஆனால் கூட்டத்தின் கருத்தையோ தீர்மானத்தையோ குறிப்பாகக் கூட எழுதாமல் மறைத்துவிடலாமெனக் கருதும் நிருபர்தான் அமைக்கப்பட்டிருக்கிறார் என்பதை 24-7-44 மித்திரன் கடைசி பக்கம் கடைசி செய்தி பத்தியில் காணக்கிடக்கிறது என கே. எஸ். எழுதுகிறார்.

ஓமலூர் திராவிட இளைஞர் மாநாடு

நிறைவேறிய தீர்மானங்கள்

22-7-44 ஆந்தேதி ஜலகண்டபுரத்தில் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஷை மாநாட்டில், யுத்தத்தை ஆதரித்தும், தென்னிந்திய ரயில்வேக்களுக்கு "தி கிரேட் டிரவிடியன் ரயில்வே" என்று பெயரிடவேண்டுமென்றும், சேலம்-மேட்டூர் பாதையை தாரமங்கலம்-ஜலகண்டபுரம் வழியாகத் திருத்தியமைக்க ஜில்லாபோர்டைக் கேட்டுக்கொண்டும், ஜலகண்டபுரம் பாடசாலையை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற கோரியும், 15,000 ஏக்கர் நிலம் தரிசாயிருப்பதை உழவுக்குக் கொண்டு வரும்படியும், ஓமலூர் தாலுகாவில் பஞ்சாயத்து உள்ள ஊர்களில் "ரேஷனிங்" கடைகள் ஏற்படுத்தவேண்டுமென்று கோரியும், திராவிடநாட்டில் தொழிற்சாலைகளை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், சேலத்தில் மாகாண மாநாட்டை நடத்த முயல வேண்டுமென்றும், ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை திராவிடர் கழகமாக மாற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

செவ்வாய்ப்பேட்டை கிராம பஞ்சாயத்து கோர்ட்டு தேர்தலில் வெற்றி பெற்ற தோழர்கள் - பூ. வி. தர்மய்ய, பே. வி. ராமசாமி அவர்களுக்கு பாராட்டுவதற்காக அவர்களுக்கு பல தோழர்கள் விருந்துகள் அளித்தனர்.

கட்கும், பெரியாருக்கும் வாழ்த்துரை வாசித்தளித்துப் பகல் விருந்து நடத்தினார்கள்.

Edited Printed and Published by N. Karivaradaswamy at the Tamil [illegible]